போர்வாள்

நம் நாடு மதம் எனும் நச்சுச் சூழலின் இடையே கிடந்து மூச்சுத் திணறித் தவிக்கிறது. இங்கு காணப்படும் எல்லாவகையான சமுதாயக் கொடுமைகளுக்கும் முதற் காரணம் மதமேதான். இந்த இழி நிலையிலிருந்து நம் சமுதாயத்தைக் காப்பாற்ற அஞ்சாத நெஞ்சு படைத்த ''புரட்சிவாதிகள் உடனே தேவை.

—லாலா லஜபதிராய்.

ர்கள்: காஞ்சி. மணிமொழியார்
இளஞ்செழியன், B.A. (Hons.)

திராவிடர் வார வெளியீடு

தனி இதழ் அணா 1¼
வெளிநாடு அணா 2

சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1979
மாசி 9
21—2—48 சனிக்கிழமை

வீச்சு 27

அத்தை வீட்டில் பேய்!

"முடியரசன்"

ன் இதழின் தொடர்ச்சி)
ன் இப்படி ஒரு மாதிரி மிரள விழிக்கிறீர்கள்? க் கண்டு பயந்துவிட்டீர்"

சேச்சே! பயமாவது ஒண்""—என்று சொல்லிக் விட்டுபோய் அந்த வேட் எடுத்து உதறினேன்.

றினேனே இல்லையோ லிருந்த உளுந்து மூட் குப் பின்னாலிருந்து டு பெருச்சாளிகள் ஸ்' என்று சத்தமிட்டுக் விட 'குடு குடு' வென்று யே ஓடின. உடனே படி சத்தம் கேட்டது. அப் துதான் என் 'பயம்' து.

மாடிப்படிகள் மரப்படியானதால் பெருச்சாளிகள் ஏறும் பொழுதும் இறங்கும் பொழுதும் அந்தச் சத்தம் கேட்டிருக்கிறது. ஊர்மிளா வந்து 'லைட்' போடாமலிருந்தால் பெருச்சாளி, பேயாகி என்னைக் கொன்றிருக்கும். அறிவு வெளிச்சமும் ஏற்பட்டாலல்லவா அறியாமை இருள் நீங்கி உண்மை வெளிப்படும். அதைவிட்டு இருளில் அகப்பட்டுக்கொண்டு ஒன்றை மற்றொன்ருய் எண்ணிக்கொண்டிருந்தால் மடிய வேண்டியதுதான் என்ற 'சித்தாந்தம்' அந்த வெளிச்சத்தில்தான் ஏற்பட்டது.

வேட்டியைக் கொடியில் போட்டுவிட்டு வியர்வையையும் துடைத்துக் கொண்டு "ஊர்மிளா! வா! உட்கார்!" என்று கையைப் பிடித்தேன்.

"ம்ம், தொடாதீர்கள் அத்தான்" என்ருள்.

"பின் ஏன் இங்கு வந்தாய்?" என்றேன்.

"நான் வருவேன் என்று காத்துக்கொண்டிருப்பீர்களே; சொல்லிவிட்டுப் போகலாமென்று வந்தேன்."

"இதற்கு வந்திருக்கவேண்டாமே" என்று கொஞ்சம் கோபமாகப் பதில் சொன்னேன்.

"சரி, நான் வருகிறேன். அம்மா விழித்துக்கொள்வார்கள்" என்ருள்.

"போவதாயிருந்தால் போகலாம்" என்று நான் கூறும் போது தொண்டை கரகரத்தது.

"வர்ணாஸ்ரமம்—ஒரு சூது நிறைந்த சுரண்டல் இயந்திரம்."

அவன் கண்களிலிருந்து இரண்டு முத்துக்கள் உதிர்ந்தன.

"ஊர்மிளா!" என்று அணைத்தேன்.

"அத்தான்!" என்று மார்பில் சாய்ந்துகொண்டாள்.

அடடா! இலக்கிய இன்பம்! இன்பம்!

* * *

வெளியில் சென்று உள்ளே நுழையும்போது அத்தையும் மாமாவும் ஏதோ பேசிக்கொண்டிருந்தது என் காதில் விழுந்தது. சட்டென்று நின்று கேட்டேன்.

"முடியவே முடியாது, நீ எவ்வளவு சொன்னாலும் நான் சம்மதிக்கமாட்டேன். என் சொத்தென்ன—கௌரவமென்ன—என் பெண்ணை, போயும்போயும் ஒரு தமிழ் வாத்தியாருக்கா கொடுப்பது. ஒருக்காலும் முடியாது. இன்னொருமுறை இந்தப் பேச்சை என்னிடம் பேசாதே!"

இது என் மாமா கூற்று.

தலை சுழன்றது. எவ்வளவுதான் சம்பளத்திலும் மற்றவகையிலும் தமிழ் ஆசிரியன் தாழ்த்தப்பட்டிருந்தாலும், அவனுக்கும் மானம் மரியாதை உண்டல்லவா? அவனும் மனிதன் தானே!

பணம் இல்லை—அழகில்லை—இப்படி ஏதாவது சொல்லியிருந்தால் பரவாயில்லை. 'தமிழ் வாத்தியார்!' அட! அது என்ன அப்படிக் கேவலமான தொழிலா! கள்ள மார்க்கெட்—லஞ்சம் இவை எல்லாம் உயர்வாகக் கருதுகிறார்களோ? ஆம், பணம் தானே உயர்வுதாழ்வைப்படைக்கிறது. அது எந்த வழியால் வந்தாலென்ன! பணம் இல்லாத காரணத்தால் பாவம் 'தமிழ் வாத்தியார்' இவ்வளவு இழிவாகக் கருதப்படுகிறான். போகட்டும்.

இவ்வளவு தாழ்வாக என்னைக்கருதும் போது எனக்கு இங்கென்ன வேலை? என்று ஒருவரிடமும் சொல்லாமல் ஊருக்குப் புறப்பட்டுவிட்டேன். 'ரயிலி'ல் வரும்பொழுது தான் ஊர்மிளாவின் எண்ணம் வந்தது. 'அடடா! அவளிடம் சொல்லிக் கொள்ளாமல் வந்துவிட்டோமே' என்று வருத்தப்பட்டேன்.

* * *

திருமண அழைப்பைப் பிரித்துப்பார்த்தேன். ஊர்மிளாவிற்கும் உலகநாதனுக்கும் திருமணம் என்றிருந்தது. என் கோபத்தைக் கையிலிருந்த அழைப்பிதழில் காட்டினேன்.

"ஊர்மிளா! என்னை ஏமாற்றிவிட்டாய்! அன்று இரவில் கூறியதெல்லாம் பொய்தானா? அவ்வளவும் உண்மை என்று நம்பிவிட்டேன். 'உங்களுக்குத்தான் என் உடல் உயிர் அனைத்தும் சொந்தம்' என்று கூறினாயே! தளுக்குக்காரி! இன்று உலகநாதனுக்கு உல்லாசப் பொருளாகப்போகிறாய்! அன்று பெருச்சாளியைப் பேய் என்று எண்ணினேன். ஆனால் அது தவறு. பெண்ணுருக் கொண்ட பேய் நீதான். என் வாழ்வு முழுதும் ஆட்டிவைக்கும் பேயாகி விட்டாய்!' என்றெல்லாம் திட்டினேன். திட்டி என்ன செய்வது. அவள் தகப்பன் பண ஆசைகொண்டு அப்படிச் செய்து விட்டான். அதற்கு அவள் என்ன செய்வாள்...இருந்தால்தான் என்ன, அவள் ஏன் உடன்படவேண்டும்? இப்படியெல்லாம் உழன்றது என் மனம்.

* * *

திருமண நாள் நெருங்கிவிட்டது. நாளை எண்ணிப் பார்த்தேன். நாளைக் காலைதான் திருமணம். அவள் மணக்கோலம் என் கண்முன் தெரிந்தது. நானும் அவள் அருகில் இருந்தேன், மறுபடி அவளருகில் உலகநாதன். மேள ஒலி
டையே அதிரச் செய்து கொ
டிருந்தது. அவள் அவ
பார்க்கிறாள். கடைக் கண்
அவன் முறுவல் பூத்த மு
தைத் திருப்பிக் காட்டுகிறா

"சார்! தபால்!"

திடுக்கிட்டு எழுந்தேன். பனை கலைந்தது, தபாலை வா
பார்த்தேன்.

"ஊர்மிளா நேற்று
சிவலோகப்ராப்தி அடை
விட்டது"

எனக்குப் பதட்டமோ
தாபமோ ஏற்படவில்லை. ஆ
என் உள்ளம் மட்டும் ஏ
சொல்லிக் கொண்டிருந்தது

"என் அத்தை வீ
பேய் இருக்கிறதென்றுஎ
னேன். ஆனால் அது பெ
சாளியாயிற்று. பெருச்ச
பேய் என்னைக் கொல்ல
தது. ஆனால் ஊர்மிளா
னைக் காப்பாற்றினாள்.
பொழுது உண்மையிலே
என் அத்தைவீட்டில் பேய்
கிறது. அது பணப் பேய்-இ
பணப் பெருச்சாளி! அ
பெருச்சாளி பேயாக மாறி
ளைக் கொன்றுவிட்டது. அ
அந்தப் பேயிலிருந்து காப்
றத் தவறி விட்டேன். அ
சந்தித்தது போல, நான்
பொழுது அவளைச் சந்தித்
தால் அவளைக் காப்பாற்றி
பேன்.........

அவள் விருப்பப்படி
காதலனை அடைய வி
தடுத்ததால் தற்கொலை
கொண்டிருக்கிறாள். அ
கொலைக் குற்றத்திற்கு உட
யாயிருந்துவிட்டு சிவலோக
பிராப்தியாம். சொல்கிற
வெட்கமின்றி, அந்தச்
ளைப் பார்க்கச் சகிக்காத
கண்கள் நீரைச்சிந்தி
எழுத்துக்களை அழித்
கொண்டிருந்தன.

தன்னாட்டுப் பிரிவினையே சமதர்மத்தின் தோற்றுவாய்!

சோஷலிச வளர்ச்சிக்குத் தடை விதிப்பது வடநாடே!

காங்கிரஸ் என்பது பூர்ஷ்வா அமைப்பு.

திராவிட இன எழுச்சிக்குத் திரு. வி. க. பேராதரவு.

சன்னையில் சென்ற கிழமை நடைபெற்ற ல தமிழர் மாநாட்டில், மறைந்த மாவீரர்— ர்ம தீரர்—சுயமரியாதை இயக்கத்தின் ழகை நண்பர்—பாட்டாளிகளின் கூட்டாளி ந்தனைச் சிற்பி **சிங்காரவேலர்** படத்தைத் திறந்து த்தார் திரு. வி. க. படத்தை மட்டுமா திறந்து ந்தார்—இல்லை—திராவிடர் இயக்கத்தின்மீது மையும் பொச்சரிப்பும் பாராட்டிக்கொண்டு கே கொலுவீற்றிருந்த சில "அதிமேதாவி" ன் உள்ளத்தையும் திறந்துவைத்தார். "எங்கே

திரு. வி. க.

ஆந்திரன்? மலையாளியைக் காணோமே ? கன்னடியனைக் காட்டப்பா! திராவிடன் து எனப்பா?" என்று கையாண்டி செய்ல யே திராவிடர் கழகத்தை நசுக்கிவிட முடி ன்று பகல் கனவு கண்டுவரும் சில பத்தாம் பசலிகளின் நெஞ்சத் துடிப்புக்கு நேர் வழியும் காட்டினர். காங்கிரஸ் என்பது பூர்ஷுவா அமைப்பு என்று சிங்காரவேலர் கூறியதைச் சுட்டிக்காட்டிவிட்டு, அதை மெய்ப்பிக்க ஆயிரம் சான்றுகள் தருவேன் நான் என்று வீர முழக்கமும் செய்தார். இதோ அந்த வீர உரை! இதைத் திராவிடர் கழகத்தவர் படிப்பதைவிட மற்றவர்கள்—திராவிடன் என்று பேசுவதே பெரும் பாவம் என்று சொல்பவர்கள்—படிக்கவேண்டும் என்பது நம் ஆசை.

திரு. வி. க. பேருரை

"தலைவர் அவர்களே, தோழர்களே, இத் தமிழர் மாநாட்டில் என்னுடைய ஆசிரியர்களில் ஒருவராகிய சிங்காரவேலர் படத்தைத் திறந்துவைக்கும்படி எனக்கு ஆணையிட்ட வரவேற்புக் குழுவினர்க்கு என் நன்றி உரியதாக; உரியதாக.

தமிழ்நாட்டில், பழங்காலத்தில், மிகப் பழங்காலத்தில், தொல்காப்பியர், எல்லா மக்களும் ஓரே சகோதரக் கூட்டம் என்னும் உயர்ந்த கொள்கையை அறிவுறுத்தினர். பின்னே, சங்க நூற்கள், யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று முழங்கின. திருவள்ளுவர் குறளும் இதையே தான் அரண்செய்து நிற்கின்றது.

நூற்றி ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னே ஜெர்மன் நாட்டிலே ஒருவர் தோன்றினர். அவர் சிறந்த தத்துவஞானி; பேரறிஞர். அவர் யார் தெரியுமா? (காரல் மார்க்ஸ் காரல் மார்க்ஸ் என்று கூட்டத்தில் சிலர் கூறுதல்) ஆம். அவர்தான். அவர், முன்னே பலரும் அறிவு கொளுத்திய இந்த உயர்ந்த சமதர்ம நெறியை விஞ்ஞானக் கண்கொண்டு ஆராய்ந்தார்; வரலாற்றுக் கண் கொண்டு அலசி அலசி ஆராய்ந்து பார்த்தார். இறுதியில் சில நன்முடிபுகளைச் செய்தார். அவற்றிற்கே மார்க்சியம் என்று பெயர்.

அந்த காரல் மார்க்ஸ் கொள்கையை, இந்த நாட்டிலே—தமிழ்நாட்டிலே—என்னுடைய நாட்டிலே முதன் முதல் விதைத்தவர் என்னுடைய ஆசிரியர் சிங்காரவேலரே.

அவருடைய அந்த யுகம் தமிழ்நாட்டில் இன்னும் ஆரம்பிக்கவில்லை. இப்போதுதான் அது அரும்புவிட்டிருக்கிறது.

அரும்புகிறதோ இல்லையோ அதைக் கிள்ளியெறிய சிலர் சூழ்ச்சி செய்கின்றனர். அவர் சூழ்ச்சி வெல்லாது; வெல்லாது. ஏனெனில் சிங்காரவேலர் கருத்து—காரல் மார்க்ஸ் கருத்து—சமதர்மக் கருத்து இயற்கையோடு இயைந்தது; விஞ்ஞானத்தோடு இயைந்தது. ஆகவே அதை யாரும் வெல்ல முடியாது. எவர் சூழ்ச்சியும் அதன் வளர்ச்சிக்குத்தடை கிடத்துதல் முடியாது.

தமிழ் நாட்டில் சமதர்ம வளர்ச்சிக்கு அடிகோலிய அவருக்கும் இந்த மாநாட்டிற்கும் என்ன தொடர்பு என்று சிலர் ஐயுறலாம். இந்த மாநாட்டில் அவருடைய படத்தைத் திறந்துவைப்பது எற்றுக்கு என்றும் சிலர் கேட்டல் கூடும். இத்தகைய நிலையில்தான் தமிழ்நாடு இருக்கின்றது; தமிழர் இருக்கின்றனர். இதை என்னென்று சொல்வது? தமிழ்நாட்டின் தவக்குறை என்றே சொல்லவேண்டும். தமிழ்நாட்டில் பிறந்தவரைப்பற்றித் தமிழர்களுக்கே தெரிவதில்லை. நமக்கே தெரிவதில்லை. தமிழ்நாட்டுப் பத்திரிகாசிரியர்களுக்குக்கூடத் தெரிவதில்லை. என்னுடைய ஆசிரியர் சிங்காரவேலர் — சமதர்மத் துறையில் அவர் என்னுடைய ஆசிரியர்—மேல் நாட்டில் பிறந்திருந்தால் பெரும் புகழ் பெற்றிருப்பார். வங்காளத்தில் பிறந்திருந்தால் ஒரு போஸ் ஆகியிருப்பார். ஆனால் அவருடைய தவக்குறை அவர் தமிழ்நாட்டில் பிறந்தார்; தென்னாட்டில் பிறந்தார்....

சிங்காரவேலர் ஒரு சிறந்த கலைஞர். எத்தகைய நுண்ணிய கலைகளையும் ஆராய்ந்து அறியும் கூர்த்த மதி வாய்ந்தவர். அவர் விஞ்ஞான வளர்ச்சியை மிகக் கூர்மையாகக் கவனித்துவந்தார். நேற்று தான் மேல் நாட்டில் விஞ்ஞானத் துறையில் புதிய தத்துவம் ஒன்று வெளியிடப்பட்டிருக்கும். இன்று போய் கேட்டால் சிங்காரவேலர் அதைப் பற்றி நன்றாக விளக்கி உரைப்பார். இஃது எல்லோர்க்கும் இயல்வதன்று.

இந்தக் காலம் ஆராய்ச்சிக் காலம். எதையும் துருவித் துருவி ஆராய்ந்து பார்க்கவேண்டும்
என்ற எண்ணம் எங்கும் விரைந்து பரவும் கால
ஆராய்ச்சி நிலையிலேயே மூழ்கித் திளைத்த
சிங்காரவேலர். அவருடைய வாழ்நாள் முழு
தும் ஆராய்ச்சியிலேயே கழிந்தது. இறக்
போதுகூட அவர் ஹெகலிசம் என்ற புத்த
எழுதுவதில் ஈடுபட்டிருந்தார்.

அவர் இறப்பதற்குச் சில நாட்களுக்கு மு
திருவாய்மூரில் என்னைக் கண்டார். கண்ட
வாடா கல்யாணசுந்தரம் எப்படிடா இருக்கி
உன் சமாசாரம் என்றார். (அவர் பழைய ஆ
எப்போதும் என்னை வாடா போடா என்றுதா
கூப்பிடுவார். இப்போது என்னை அப்படிக்
பிடுவார் இல்லையே என்றுதான் வருந்துகிறே
"கல்யாணசுந்தரம், நான் தமிழைப்பற்
ஆராய்ச்சி செய்யப் போகிறேன். பழைய இ
லக்கியங்களை ஆராய்ச்சி செய்யப் போகிற
பழைய முறையில் யார் யாரோ செய்திருக்கி
கள். நான் விஞ்ஞான வழியில் ஆராயப் போ
றேன். நீ தமிழ்ப் பண்டிதன் அல்லவா! உன் து
இதற்கு வேண்டும்" என்றார். இயன்றவ
செய்வேன் என்றேன். ஆனால் நம்முடைய கு
அவர் தமிழ் ஆராய்ச்சியை முடிப்பதற்கு முன்
இறந்துபோய்விட்டார்.

வகுப்பு (Study Class) நடத்துவதில் சிங்கார
வேலருக்குத் தனி ஆற்றல் உண்டு. அவர், த
நடத்திய வகுப்புகளில் மார்க்சீயத்தை படிப்படி
போதித்துவந்தார். இப்போது யாரும் அத்தகை
வகுப்புகளை நடத்துவதில்லை. அவர் வகுப்பு
நடத்தி வந்தது ஒரு பெரிய தொண்டு.

அவர் எல்லாத் துறைகளிலும் நுழை
நுழைந்து பார்த்தார். தொடக்கத்திலே ஒ
ரிடம் வேதாந்தம் பயின்றார். ஆனால் அவர்
ளம் அதில் ஈடுபடவில்லை. பிறகு புத்த பி
களிடம் பாடம் கேட்டார். மகாபோதி ச
ஒன்று அமைத்து நீண்ட நாட்கள் அரிய தொ
டாற்றினார்.

பிறகு காங்கிரசிலும் ஈடுபாடு கொண்டார்
சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியில்
இருந்தார். அகில இந்திய காங்கிரசிலும்
இருந்தார். பிறகு காங்கிரசிலிருந்து விலகி
விட்டார். எனக்கு முன்னே விலகிவிட்டார்.

ஏன் காங்கிரசை விட்டுவிட்டீர்கள் என்
ஒருமுறை நான் கேட்டேன். உடனே
அவர், "அப்பா, நீ வடநாட்டிற்கு

(தொடர்ச்சி 9-ம் பக்கம் பார்க்க)

12-ம் பக்கத் தொடர்ச்சி)
ற்சாலையும் எலக்ட்ரிக்
டார் தொழிற்சாலையும் டில்லி
ரால் நசுக்கப்பட்டதோடு
துவக்க இருந்த மோட்டார்
உற்பத்தித் தொழிலும் தலை
முடியாமல் நின்று விட்டது.
இந்தியாவில் தொழில்களை
விடுவதில்லை என்று கங்
கட்டிக்கொண்டுள்ள மத்
சர்க்காரின் மனப்பான்மை
பார்த்ததும், என்னுடைய
எல்லா திட்டங்களையும் கை
வண்டிய கட்டாயத்துக்கு
ானேன்.
5-ல் நான் ஒரு ஜெர்மன்
த்திலிருந்தபோது, எலக்டரிக்
ரேசர் ஒன்றைச் செய்
விற்பனைக்கு வந்த எல்லா
களைவிட இதுவே மேலான
துமாதிரியானதும் என்று
டப்பட்டது. இந்த ரேசரின்
ாகத்தை சுவிஜர்லாந்தி
டல் பாகத்தை பெல்ஜியத்
உள்பாகத்தின் அட்டைத்
, எலக்ட்ரிக் பாட்ரிகளை
ாந்திலும் க்ஷவரத் தகடுகளை
) கோவையிலும் தயா
ணக்கப்பட்டன.
வையில் என்னால் தயாரிக்
இந்த க்ஷவர பிளேடுகள்,
ள்ள எல்லா பிளேடுகளைக்
லும் மிக உயர்ந்தவை
சுவிஜர்லாந்து, இங்கிலாந்
ற வெளிநாடுகளிலிருந்து
பாராட்டுக் கடிதங்கள்
க்கின்றன; 1936-ல் ஜெர்
ள்ள லீப்ஜிக் பொருட்
யில் முதலாவது, இரண்டா
சுகளும், 1937-ம் வருஷம்
ணபுரி, பொருட் காட்சி
தங்கமெடலும் நற்சாட்சி
, அதே நகரில் 1938-ல்
பொருட் காட்சியில் 'ஷீல்டு'
ம் வெகுமதிச் சின்னமும்
ப் பெற்றிருக்கின்றன.
பிளேடுகளை, ஜாக்கிரதை
உபயோகப் படுத்தினால்,
ாலம் வரை மேன்மையாக
செய்யும். கோவையி
ஒரு டாக்டர், 2½ வருஷம்
ரே ஒரு பிளேடை உபயோ
வந்த பிறகு அதை என்னி
ருப்பிக் கொடுத்திருக்கிறார்.
இலாகாவின் ஜாயின்ட்
டரான ராவ்பஹதூர் எம்.
தையாவிட மிருந்து 1½

வருஷ காலம் அவரால் உபயோகிக்கப்பட்டு வந்த ஒரு பிளேடு திரும்பி வந்திருக்கிறது. பர்மா ஷெல் கம்பெனியிலும் சார்ட்டர்டு பாங்கிலுமுள்ள சில ஐரோப்பிய உத்தியோகஸ்தர்கள், 1936 முதல் இதே பிளேடுகளையே உபயோகித்து வருகின்றனர். "இந்த பிளேடுகள் கிடைக்கும் வரை, இதர பிளேடுகளைப்பற்றி நாங்கள் கனவிலும் நினைக்கப் போவதில்லை" என்று அவர்கள் எழுதிய கடிதங்களில் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

நான் செய்த "சேப்டி" ரேஸரைப் போலவும் க்ஷவர பிளேடுகள் போலவும் அதற்கு முன் வேறு எவரும் எங்கும் செய்ததில்லை. அவ்விரண்டும் அமெரிக்க ஐக்ய நாடுகளில் வெகுவாகப் பாராட்டப்படுகின்றன. ஒரு அமெரிக்க கம்பெனியார், ஆண்டு தோறும் 1 லக்ஷத்து 20 ஆயிரம் பிளேடுகள் அனுப்பிக் கொடுக்க வேண்டுமென்று 'ஆர்டர்' அனுப்பினார்கள். அதன் பொருட்டு 'பிளேடு' செய்வதற்கான உருக்கிரும்புத் தகடுகள் வேண்டுமென்று வடக்கே உள்ள டாடா கம்பெனியாரைக் கேட்டதில், தங்களுக்கு அதில் சிரத்தை கிடையாது என்று எழுதிவிட்டார்கள். வினியோக (supplies) இலாக்கா டிப்டி டைரக்டரான திரு. எம். ஏ. சீனிவாசன் அவர்கள், வருஷக்கணக்காக என்னுடைய பிளேடுகளை உபயோகித்து அவற்றின் தன்மைகளை அறிந்திருப்பதால், மேலும் அவைகளைத் தயாரிக்கும்படியாக என்னைக் கேட்டார். நானும் சரி என்றேன். அவரும் தம்மாலானவரை, சர்க்கார் மூலமாகவே முயற்சி செய்தும் டாடா கம்பெனியாரிடமிருந்து இரும்புத் தகடு பெறமுடியவில்லை. ஆகவே இந்தத் தொழிலும், வடநாட்டவர் துணை செய்ய மறுத்துவிட்டமையால், நின்று போயிற்று.

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

திருக்கவேண்டும். இல்லாமல் மாநாடு கூடியது தவறு; தமிழ் நாட்டுக்கும் அவமானம்.

சுருக்கமாகச் சொல்வதானால், இன்றைய தமிழ்நாட்டு

அரசியல் உலகம் என்ற நினைவிலே (உண்மை நிகழ்ச்சியிலே) ஒரு கனவு அகில தமிழர் மாநாடு. அந்தக் கனவிலே (குழப்பத்திலே) ஒரு நினைவு (தெளிவான வழி—நேரில் காணும் வழி) திரு. வி. க.—ஜி. டி. நாயுடு இருவர்தம் உரைத் தொகுப்பு. "போர்வாள்", இரண்டு பேச்சுகளையும் தாங்கி வருகிறது இந்த வாரம்—மக்கள் மட்டுமல்ல, மாநாட்டைக் கூட்டிய நண்பர்களும் படித்துத் தெரிந்துகொள்க!

திருத்தம்

சென்ற இதழ் 7-ம் பக்கம் மூன்றாவது கலம கடைசி வாக்கியம் பின்கண்டபடி இருக்க வேண்டும். திருத்திக்கொள்க:

இயற்கைச் செல்வியின் நடன பூமி இலங்கை. வெள்ளித் தாம்பாளத்தில் தங்கச் சிமிழினை வைத்தது போல அந்த மாணிக்கத் தீவு அலைகடலுக்கிடையே அமர்ந்து, ஒய்யாரமாக ஊஞ்சலாடுகிறது.

சிவகங்கை செய்தி

அறிஞர் சி. என். அண்ணாதுரை அவர்கள் 29—2—48 அன்று மாலை 4-மணிக்கு சிவகங்கை இராமச்சந்திரன் நினைவுப் பூங்காவைத் திறந்து வைப்பார்கள். மாலையில் திராவிட இளம் பேச்சாளர் கழகத்தின் சார்பில் பொதுக் கூட்டம்.

போர்வாள்

21—2—48 சனிக்கிழமை

நினைவிலே கனவு! கனவிலே நினைவு!

நினைவு

புனித பாரதத்தை இனியும் துண்டாடுவதா? கூடாது. தனி நாடு, தனி அரசு, சுதந்தரத் திராவிடம், விடுதலைத் தமிழகம் என்று ஒவ்வொருவரும் கேட்கத் தொடங்கிவிட்டால் இந்தியா என்னுவது? திராவிட நாடாவது! தமிழ் நாடாவது! ஒன்றும் கூடாது! வேண்டுமானால் தனி மாகாணம் கேட்போம். தனி நாடு கேட்பது அடாது.

—காமராஜர்.

தமிழன் என்று சொல்லடா! தலை நிமிர்ந்து நில்லடா! வடநாட்டிலிருந்து விலகுவோம்! தனி ஆட்சி புரிகுவோம்! நாம் யார்க்கும் குடி அல்லோம்! டில்லி சர்க்காருக்கு அஞ்சோம்! ஆங்கிலேயரிடம் அடிமை வாழ்வு வாழ விரும்பாத நாம் வடநாட்டினர் ஆதிக்கத்தில் வாழ ஒருப்படோம்.

—நாவலர் பாரதியார்.

இதென்னப்பா இது தமிழனும் கிமிழனும்! ஜமீன் பறி போகிறது! குபேரப் பட்டணம் கொள்ளை போகிறது! ஜமீன் மசோதாவை நிறுத்தச் சொல் முதலில்! பிறகு பேசிக் கொள்ளலாம் தமிழன் பெருமையை. செங்கோலே போகிற போது சங்கீதத்திற்கு என்ன அவசரம்?

—ஊத்துமலை ஜமீன்தார்.

புலி வில் கயல் பொறித்த தமிழ்க் கொடியே நம் கொடி! சேர சோழ பாண்டியரின் சின்னங்கள் அவை. வாழ்க நம் கொடி! வளர்க அதன் புகழ்!

—திருச்சி விசுவநாதன்.

செ! இதுவா தமிழ்க் கொடி! என்ன மோசம்! சேர சோழ பாண்டியர்கள்தானே சாதி மதத்தை வளர்த்தவர்கள்! அவர்கள் சின்னங்களையா நம் கொடியில் அமைத்துக் கொள்வது! என்ன அவமானம்! என்ன அவமானம்!

—சட்டமன்றத் தலைவர் சிவசண்முகம்.

காங்கிரஸ் என்பது பூர்ஷுவா சொசைடி என்றார் சிங்காரவேலர். அதை மெய்ப்பிக்க நான் ஆயிரம் சான்றுகள் தருவேன். காங்கிரஸ் வரலாற்றிலிருந்தே தருவேன்....தென்னாடு பிரிவது உறுதி உறுதி.

—திரு. வி. க.

காங்கிரஸ் ஒன்றுதான் நமக் விடுதலை வாங்கிக் கொடுத்த இனியும் காங்கிரஸ் ஒன்றுதா நம்மை முன்னேற்றும். கா கிரஸ் இருக்கும்போது நாட்டு பிரிவினை எதற்கு?

—பக்தவச்சலம்

திராவிடநாடு திராவிடருக்கு என்பதுதான் இலட்சிய கீதம் அதை அடைவதே நமது வாழ் கையின் நோக்கம்.

—எஸ். முத்தையா

எங்கே இருக்கிறான் ஆந் ரன்? வந்தானா இங்கே? தமி நாடு தான் நோக்கம். அ அடைவதுதான் என் இலட் யம்.

—மறுபடியும் பாரதியார்

இந்த மாநாடு தமிழர் மாநா என்று அழைக்கப் பட்டாலு இதை நான் ஆந்திரர்கள், கன்ன டர்கள், மலையாளிகள், மைசூ காரர்கள், கொச்சியக்கள் புதுக் கோட்டைக்காரர்கள் ஆகியோ ரிடமிருந்து பிரித்துக் கா இயலவில்லை. பம்பாய்க்கும் ஒரிசாவுக்கும் தெற்கே உள்ள தென்னாடு முழுவதும் ஒரு தனி நாடாக, டில்லியுடன் தொடர் பற்றதாக, பெரியார் சொல்வது போல் திராவிடநாடாக அமைய வேண்டும். இதுதான் முதல் பிரச்சினை.

—ஜி. டி. நாயுடு.

வடநாட்டு ஆதிக்க மாவது சுரண்டலாவது! ஒன்றும் கிடை யாது. நான் சொல்கிறேன்— ஒன்றும் கிடையாது.

—"சுதேசமித்திரன்" சி. ஆர். சீனிவாசன்

அது எப்படியோ கிடக்கட டும்ணே! திராவிடநாடு வந்தாலும் சரி, தமிழ்நாடு வந்தாலும் சரி ஒன்றுமே வாராவிட்டாலும் சரி

எல்லாம் வந்தாலும்
ோமணு ஆதிக்கம் அப்
ன்றி இருக்கவேணும்.
கவனிக்கன்னு நான் வந்
கன்!
வேற்புத்தலைவர்
ங்கடேச அய்யங்கார்.

கனவு!

வளவு பேரையும் ஒன்று
வேண்டும்.

னவிலே, கனவு!

ல தமிழர் மாநாடு.

னவிலே, நினைவு!

. வி. க., ஜி. டி. நாயுடு
ளின் தெளிவுரை.

வு, கனவு, நினைவில்
வு, கனவில் நினைவு
ற்றின் கூட்டுத்தொகை

குழப்பம்!

* *

மேலே உள்ள சிறு குறிப்புக
தொகுப்புதான் இந்த
த் தலையங்கம். தலையங்
டிந்து விட்டது. இரத்தி
ருக்கமான தலையங்கம்.
யங்கத்தின பொருள்
ிடை மலை.
ல்லை — இல்லை — ஓரே
யம்!'' என்று யாராவது
ினுல் அவர்கள் மட்டும்
உள்ள விளக்கததைப்
லாம்.]

* *

ற்றிரவு நான் பாராளு
தில் பேசுவதுபோல ஒரு
கண்டேன். உடனே
ணக் கசக்கிக்கொண்டு
ப் பார்த்தேன். அடடா!
வியப்பு! நான் உண்மை
ய பாராளுமன்றத்தில்
ொண் டிருக்கக் கண்
!''
ரா ஒரு சென்னை
A. பேசியது இது
எண்ணி விடாதீர்கள்.

சீமை பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் வேடிக்கையாகக் கூறிய வாசகம்.

அங்கே (இலண்டன் பார்லிமென்டில்) சபைக் கூட்டங்கள் விடிய விடிய நடப்பது வழக்கம். சில சமயம் இரவு 2 மணி 3 மணி வரையிலும், ஒவ்வொரு சமயம் இரவு முழுவதும் கூட, பார்லிமென்ட் விடாது நடந்து கொண்டிருக்கும். தூக்கம், மன்ற உறுப்பினர்களை வலை போட்டு இழுக்கும். நாட்டுக்குத் தொண்டாற்ற வேண்டியவர்கள் நாம் என்ற கடமையும் பொறுப்பும் "தூங்காதே தோழா! முக்கியமான சட்ட திட்டங்கள் நிறைவேறும் நேரம்'' என்று அவர்கள் காதில் ரீங்காரம் செய்துகொண்டிருக்கும். அந்த வலைவீச்சிற்கும இந்த ரீங்காரத்திற்கும் இடையே பாராளுமன்ற உறுப்பினர்களின் கண்களும் மனமும் போய்ப்போய் வந்துகொண்டிருக்கும். சில சமயம் வேடன் வலையிலே சிக்கிய மான்போல, உறுப்பினர்கள், தூக்கம் எனும் தூண்டில் முள்ளில் சிக்கிவிடுவதும் உண்டு. (அதிலே வியப்பும் இல்லை. இங்கே பட்டப் பகலில் சட்ட சபை கூடும் போதே சில எம். எல். ஏ. க்கள் சும்மா தூங்கலாமா குறட்டை விட்டுத் தூங்கலாமா என்று கேட்டார்களே! அங்கே நள்ளிரவில் கூட்டம் நடக்கும் போது தூங்கிவிட்டால் அது ஒரு குற்றம் ஆகுமா?)

அப்படித் தூங்கிவிட்டவர்களுடைய "கெட்ட காலம்,'' சில சமயம், அவர்கள் பேசவேண்டிய முறை அந்த நேரம் பார்த்து வந்து சேரும். மன்றத தலைவர்

29-2-48: தலைவர் தாக்கீது

★

காந்தியார் அவர்கள் இயற்கைக்கு விரோதமாக மரணமாக்கப்பட்டது குறித்து அநுதாபப்படவும், கொலை சம்பவத்தைக் கண்டிக்கவும், திராவிடர் கழகத்தின சார்பாக ஒவ்வொரு ஊரிலும் திராவிடர் கழகத்தார் அநுதாப, கண்டனக் கூட்டம் 29—2—48 ஞாயிற்றுக்கிழமை யன்று ஏற்பாடு செய்யவேண்டியது. கூட்டத்திற்கு ஆடம்பரம் கூடாது. செலவு கூடாது. ஒலிபெருக்கி கூடாது. சொற்பொழிவு கூடாது. தலைவர் அல்லது சபையில் அழைக்கப்பட்டவர் தீர்மானத்தைப், படித்தும் பொதுமக்கள் எழுந்து நின்று, ஒரு நிமிஷம் மவுனமாக இருந்தும், மிக அமைதியாகப்பிரிந்து விடவேண்டியது.

தீர்மானத்தை திராவிடக் கழக மத்திய நிலையத்துக்கும் காந்தியார் மகன் தோழர் தேவதாஸ் காந்திக்கும் பண்டித ஜவகர்லால் நேரு அவர்களுக்கும் அனுப்பவேண்டியது.

செய்தியை எல்லாப் பத்திரிகைகளுக்கும் அனுப்பவும்

ஈ. வெ. ராமசாமி

கூப்பிடுவார், பக்கத்தில் உள்ளோர் எழுப்புவர்; எழுந்து அவசர அவசரமாக "ஸ்பீக்கர் சார்" என்ற நாமாவளியோடு பேசத் தொடங்குவர். அவர்கள் அந்த நேரத்தில் படும் வேதனையைப் பார்த்தால் ஐயோ பாவம் என்று சொல்லத் தோன்றும் நமக்கு. ஆனால் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இந்த நிலையை அழகுபடச் சித்தரித்துக் காட்டினர் ஒருமுறை. அந்த வாசகத்தைத்தான் முதலில் குறிப்பிட்டோம்.

சென்னை அகில தமிழர் மாநாடு ஒரு கனவு! பாராளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டாரே அதேபோன்ற கனவு!

மாநாட்டைக் கூட்டிய கனதனவான்கள் — யார் கூட்டினரோ நாம் அறியோம்—நீண்ட நாட்களாகத் தூங்கி இருக்கிறார்கள்—அரசியல் தூக்கம். அந்தத் தூக்கத்திலே கனவு கண்டிருக்கிறார்கள் நாடு நலிவுறுவதாக. உடனே விழித்திருக்கிறார்கள். விழித்ததும் நாடு உண்மையிலேயே நலிவுறுகிறது என்று கண்டு, அந்த நலிவு அகில தமிழர் பேரிலே போக்க, ஒரு மாநாடு கூட்டியிருக்கிறார்கள். "இந்தக் கனவும் நனவும் எப்படித் தெரியும் உமக்கு? நீர்தான் மாநாட்டைக் கூட்டியவரையே அறியேன் என்கிறீரே" என்ற ஐயம் தோன்றலாம் உங்களுக்கு. நாம் மாநாட்டிற்குச் சென்றிருந்தோம் ஆகவே தெரியும்; மாநாடு சொல்லாமற் சொல்லிற்று இவ்வளவு சேதிகளையும்.

மாநாட்டை நடத்த எண்ணிய தோழர்களுடைய நோக்கம் சிறந்தது. ஆனால் கையாண்ட முறைதான் சரிஇல்லை.

தமிழர் எல்லோரையும் ஒன்று கூட்ட வேண்டும் என்று கனவு கண்டிருக்கிறார்கள். நல்ல கனவு. ஆனால் எல்லோரும் என்பதிலே யார் யார் அடங்கவேண்டும் என்பதை அவர்கள் அறியவில்லை. ஆகவே மாநாடே ஒரு கனவாக முடிந்தது.

ஒரு ஜமீந்தார்—கொடி உயர்த்தும் திருவாளர்! ஒரு புரோகித இனத்தவர் வரவேற்புத் தலைவர்! ஒரு சமதர்மி மற்றொரு சமதர்மியின் படத் திறப்பாளர். ஒரு தமிழ் வீரர் மாநாட்டுத் தலைவர். இந்த நால்வரையும் ஒன்றாகப் பிணைக்க எண்ணினால் அது நடக்கும் காரியமா! ஜமீந்தார்; புரோகிதர்—இருவரும் ஓர் இனம். ஒன்று சேர்க்கலாம் இவர்களை. சமதர்மி, தமிழ் மறவர்—இருவரும் மற்றோர் இனம். இவர்களையும் ஒன்று சேர்க்கலாம். ஆனால் ஒரு ஜமீந்தாரையும் சமதர்மியையும், ஒரு தமிழ் மறவரையும் புரோகிதத் திருவினரையும் எப்படி ஒன்று சேர்க்கமுடியும்?

பெயர் அகில தமிழர் மாநாடு. அதற்கு வரவேற்புத் தலைவர் ஒரு தமிழரல்லாதார். அது எப்படி வெற்றிபெறமுடியும்?

தமிழ் நாட்டிலே உள்ள இரண்டு முக்கியமான கட்சிகள் திராவிடர் கழகமும், கம்யூனிஸ்ட் கட்சியும். அவை இரண்டும் தமிழர் மாநாட்டில் கலக்கவில்லை. காங்கிரசின் சார்பிலே காமராஜர் வந்தார், ஆனால் அவர் மாநாட்டின் நோக்கத்தை ஆதரிக்கவில்லை. பிறகு ஏன் வந்தார்—நாம் அறியோம் பராபரமே!

வாராதவர்கள் போகட்டும், வந்தவர்கள் முக்கியமாக பிரமுகர்கள் அவர்களில் எந்த இரண்டு பேருக்கும் இடையே கூட எந்த ஒரு முக்கிய பிரச்சினையிலும் கூட ஒற்றுமை கிடையாது. பிராமணர் தமிழரா—மிகச் சிறிய கேள்வி. அதிலே கூட மாநாட்டினர்க்கு ஒத்த கருத்து இல்லை. தமிழ் நாட்டி
வசிப்பவர்களெல்லாம் தமி
கள் என்று கூறுகிறார் தி
பாளர் பக்தவச்சலம். (அப்ப
யானால் தமிழ் நாட்டில் வசிக்
வெள்ளையர்கள் தமிழரா) தமி
பேசுபவர் எல்லாம் தமிழ
ரென்கிறார் வரவேற்பாளர் வெ
கடேச அய்யங்கார். (அப்ப
யானால் ஆரியர் தமிழரா) தமி
அல்லர் பார்ப்பனா என்று கூ
இருக்கிறார் பாரதியார் அழு
தந் திருத்தமாக. (அப்படி
னால் அந்த மாநாட்டில் ஒ
பிராமணர் திறப்பாளர் ஆ
இரகசியம் என்ன?) இதுதா
அகில தமிழர் மாநாடு. இ
மாநாடு தமிழர்க்கு எப்படி வ
காட்ட முடியும்?

பிரிவினை வேண்டுமா வே
டாமா? தமிழ்நாடு தனி அர
செலுத்த வேண்டும்—இ
பாரதியார் முழக்கம்; அ
மாநாட்டுத் தலைவர். தென் இ
திய சமஷ்டியே முதல் தேவை
மொழி வழி மாகாணங்கள்கூ
பிறகு பார்த்துக்கொள்ளலாம்—
இது ஜி. டி. நாயுடு கருத்தா
அவர் முக்கிய பேச்சாளர். பி
வினை என்பது பித்தர்கள் செ
லே—சிவசண்முகனார் தெ
வுரை; அவர் முக்கிய படத்திற
பாளர். பிரிவினை பற்றிய பே
சே இல்லை—வரவேற்பாள
திரு. அய்யங்கார் உரையில்
மாநாட்டுத் தீர்மானமோ இ
நான்கிலும் சேராத ஒரு குழ
பம்.

வேறு பிரச்சினைகளிலே ஆ
ரம் வேறுபாடுகள் இருக்கலா
கவலையில்லை; ஆனால், தமிழ
யார்? தமிழ் நாட்டின் அரசிய
எப்படி இருக்கவேண்டும் எ
பதிலே மாநாட்டின் முக்கிய பி
முகர்களுக்கு இடையே முற்
லும் ஒன்றுபட்ட கருத்து இரு

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

..ாத ஆள். உனக்குச் சங்கதி தெரியாது. ..கிரஸ் ஒரு பூர்ஷ்வா சொசைடி" (முத ..த்வ அமைப்பு) என்று கூறினார். காங் ..ல் வடநாட்டு ஆதிக்கம் மிகுந்து விட் ..என்பதும் அது ஓர் முதலாளித்வக் ..ம் என்பதும் அவர் கருத்து. இதைத் ..க தரிசனம் போல் கூறிவந்தார்.

..சகிறிஸ்து ஒரு தீர்க்கதரிசி. என் ..யர் சிங்காரவேலரும் ஒரு தீர்க்கதரிசி.

..போது வடநாடு—தென்னாடு என்பதுபற்றி ..பேசப்படுகிறது. நான் இப்போதுதான் ..ன். இந்த நாட்டிலும் அதுபற்றிப் பல ..சி இருப்பார்கள் என்றே எண்ணுகிறேன். ..ரது சிங்காரவேலர் இருந்திருந்தால் என்ன ..ருப்பார்? தென்னாட்டுப் பிரிவினையில் ..ருத்து எவ்வண்ணம் இருக்கும்? சொல்ல ..ண்டுமோ?

..மார்க்ஸ் கருத்துப்படி முதலில் உலகம் .. அடைதல் வேண்டும். உலகம் விடுதலை ..ந்துவிடுமானால், அந்தந்த நாடு தானே விடு ..ற்றுவிடும். மார்க்சிய கருத்துப்படி இங் .. இன்னும் விடுதலை அடையவில்லை. ..க்கா இன்னும் விடுதலை அடையவில்லை. ..ா கூட அடையவில்லை.

..யாவுக்கு இப்போது விடுதலை வந்துவிட் ..ன்று சொல்லப்படுகிறது. ஆனால் இது ..டுதலை அல்ல; ஏதோ ஒருவித விடுதலை ..க்கிறது என்றுதான் நான் சொல்வேன். ..கருத்தை காந்தியடிகள் சொல்லி இருக் .. ஜவகர்லால் நேருகூட சொல்லி இருக்

..க்ஸ், போலீஸ் ஆட்சி (State Police) ..ல் கூடாது என்கிறார். அரசாட்சி என் ..ட இருத்தல் கூடாது என்கிறார். மக்களே, .. அறப்படி, சிறந்து சிறக்க, தம்மையே ..ளவேண்டிய நிலை பெறுதல்வேண்டும் என் .. இந்தக் கருத்திற்கு—சோஷலிசக் கருத் ..சிங்காரவேலர் கருத்திற்கு வடநாடு இடங் ..குமா தென்னாடு இடங்கொடுக்குமா என் ..ன் இன்றுள்ள கேள்வி. என் கருத்துப் ..நாடு—இப்போதுள்ள வடநாடு—சோஷ ..ற்கு ஒருக்காலும் இடங்கொடுக்காது. ..ட்டில்தான் சோஷலிசம் தோன்ற முடி ..இதற்கு ஒரு சான்று கூறுகிறேன். காந்தி ..ச் சுட்டுக் கொன்றவன் ஒரு வடநாட் .. காந்தியடிகளைக் கொல்ல ஒரு தென்னாட்ட..வன் துணியமாட்டான். எந்தக் காரணம் கொண்டும் துணிய மாட்டான். ஏனெனில் திருவள்ளுவாதம் அறம் மிக்க நாடு தென்னாடு. எவ்வுயிர்க்கும் கொல்லாமையை அறிவுறுத்தும் நாடு தென்னாடு.

வடநாடு இப்போது என்ன கலையைப் பயில்கிறது? துப்பாக்கிக் கலையைப் பயில்கிறது. சுட்டுக் கொல்லும் பாழுங் கலையைப் பயில்கிறது. இத்தகைய வடநாட்டிலேயா சோஷலிசம் கால் கொள்ளல் இயலும்?

திருவள்ளுவர் கருத்துப்படி நடக்கும் தென்னாட்டில்தான் சோஷலிசம் தோன்றும். தென்னாடு சோஷலிச ஆட்சியை அடைந்துவிட்டால் பின்னர் வடநாடு அடைந்துவிடும். பின்னர் சீனாவை —உலகத்தையேகூட சோஷலிசம் அடையும்படிச் செய்தல் கூடும்.

தென்னாட்டில் சோஷலிச ஆட்சி தோன்ற வேண்டுமானால் அது வடநாட்டிலிருந்து பிரிந்தே தீரவேண்டும். கருத்து வேற்றுமையுடையோர் மன்னிக்க—மன்னிக்க.

நாட்டில் தமிழ்நாடு என்று ஒரு கிளர்ச்சி உள்ளது திராவிடநாடு என்று ஒரு கிளர்ச்சி உள்ளது. எது சரி என்று நீங்கள் ஐயுறலாம்.

இப்போது மலையாளி உருத்து நிற்கிறான். ஆந்திரன் கருத்து நிற்கிறான் (கருத்து என்றால் கோபித்து) தமிழர்களும் "ஐயோ! எல்லை என்னுயிற்று! என்னுயிற்று!" என்று பதைத்து நிற்கின்றனர். ஆனால் இவர்கள், "இந்த நாடு எங்களுக்கு, இதோ இதுவரை உங்களுக்கு" என்று எப்படியோ ஒரு வழியாக மாகாணப் பிரிவினையைச் செய்துமுடித்த பிற்பாடு இவர்கள் நால் வரும்—தமிழர் தெலுங்கர் மலையாளியர் கன்னடர் நால் வரும் ஒன்று சேர்வது உறுதி; உறுதி; உறுதி.

இன்றைய தினம் ஆந்திரர்கள் எப்படியோ எண்ணிக் கொண்டு போகலாம். ஆனால் மாகாணப் பிரிவினைக்குப் பின்னே, மொழி ஆராய்ச்சி செய்யுங் காலத்தில், ஆந்திரரிடையே ஒரு விழிப்பு ஏற்படும். மலையாளிகளிடையே ஒரு விழிப்பு ஏற்படும். கன்னடரிடையே ஏற்படும். தமிழரிடையேயும் ஏற்படும். அப்போது நாம் அனைவரும் தென்னாட்டவர் என்ற உணர்ச்சி வரத்தான்போகிறது. மிக விரைவில் தென்னாடு தென்னாட்டவர்க்கே என்ற கிளர்ச்சி எழுந்தே தீரும். தென்னாட்டில் சோஷலிசமும் அப்போதுதான் வரும். எனவே நமக்குப் பரந்த உணர்ச்சி—தென் இந்திய உணர்ச்சி வந்து தீரவேண்டும் என்பது என் கருத்து.

இப்போது சோஷலிச வளர்ச்சிக்குத் தடை விளைத்துவது வடநாடு வடநாடு வடநாடு என்று நான் அறைகூவிச் சொல்வேன். இதை யாரும் மறுக்க முடியாது. எனக்கு நான்கு மணி நேரம், ஐந்து மணி நேரம் பேச இடங்கொடுத்தால் இதற்காக

(தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க)

நினைவு மேடை

"நீ திருடக்கூடாது"

டாக்டர் நாயர் திராவிட இயக்கத்தின் நிர்மாண கர்த்தாக்களில் ஒருவர். அவரும் தியாகராயரும் இல்லையேல், ஆதியில், திராவிட இன எழுச்சி தென்னாட்டில் தோன்றியே இராது. அவர் ஒரு குறும்புக்கார பேர்வழி. அவருடைய சமயோசித புத்தியையும் குறும்புத் தனத்தையும் பாராட்டாதவர்கள் அந்தக் காலத்தில் யாரும் கிடையாது. அவருடைய வாழ்க்கையில் ஒரு நிகழ்ச்சி. மாணவர் நாயர் எடின்பரோவில் படித்துக் கொண்டிருந்தார். அப்போது அவர் ஒரு விடுதியில் தங்கி இருந்தார். ஒருமுறை, அவர் வெளியேபோய்விட்டு வந்தபோது, தான் வைத்திருந்த புகையிலைப் பையிலிருந்து யாரோ கொஞ்சம் புகையிலையை எடுத்திருக்கக் கண்டார். போனால் போகிறது என்று இருந்து விட்டார். அடுத்த நாளும் அவர் இல்லாத சமயத்தில் புகையிலை எடுக்கப் பட்டிருந்தது. அன்றும் பொறுத்துக் கொண்டார். மூன்றாவது நாளும் புகையிலைத்திருட்டு நடந்தது. அடுத்தநாள், "சரி—இனிமேலும் இதைப் பொறுத்துக் கொண்டிருப்பது ஆபத்து" என்று முடிவு கட்டிவிட்டு, பைபில் புத்தகத்தை எடுத்து "நீ திருடக்கூடாது" என்ற ஏசுநாதர் வாக்கியத்தை அப்படியே பைபில் அடையாளம் தெரியும்படியாகக் கத்தரித்தெடுத்து, தன் புகையிலைப் பைமீது ஒட்டிவிட்டு, வழக்கம் போல் வெளியே போய்விட்டார். அதற்கப்புறம் ஒரு நாள்கூட புகையிலைத் திருட்டு நடக்கவே இல்லை. ஏன் தெரியுமா? திருடியவன் ஒரு பைபில் மாணவன். பரம பக்தன். ஏசுநாதர் திருநாமத்தை அவன் ஜபிக்காத நாளே கிடையாது. அடுத்த நாள் அவன் வழக்கம் போல் புகையிலையைத் திருட டாக்டர் நாயர் அறையில் நுழைந்தான். புகையிலைப் பையையும் கையில் எடுத்து விட்டான். உள்ளிருந்து புகையிலையை அள்ளத் தொடங்கினான். அப்போது தற்செயலாக பையின் மீது **நீ திருடக்கூடாது** என்ற ஏசுநாதர் வாக்கியம் இருக்கக் கண்டான் அவ்வளவு தான். கண்டதும் நடுநடுங்கிப் போய்விட்டான். புகையிலைப் பையைப் போட்டுவிட்டு, தப்பினேன் பிழைத்தேன் என்று மெள்ள நழுவி ஓடிவிட்டான். இனிமேல், திருடுவானா அவன்! திருடினால் ஏசு
நாதர் தண்டிக்க மாட்டாரா? பிற்கால
டாக்டர் நாயர் இதைச் சொல்லிச் சொல்லி
பது வழக்கம்.

பெர்னட்ஷாவும் காந்தியாரும்

பெரிய மனிதர்களுடைய கையெழு
வாங்கி பத்திரப்படுத்தி வைப்பது எ
சாதாரணமாக மாணவர்களுக்கு ஏற்படும்
பைத்தியம். பெர்னட்ஷா, காந்தியார்
இருவரும் எங்கே போனாலும் மாணவர்
பொது மக்களும் விடாமல் பின் தொ
சென்று "கையெழுத்து வேட்டை" ஆ
வழக்கம். இதென்ன பெரிய தொல்லை
போய் விட்டதே என்றெண்ணி, காந்தியார்
கையெழுத்து வேண்டுமானால் பத்து ரூபா
தால்தான் தருவேன் என்று சொல்லிவிட்
(ஆதித் திராவிடராய் இருந்தால் 5 ரூபாய்)
போல பெர்னட்ஷாகூட ஒரு குறிப்பிட்ட
தொகையை தன்கையெழுத்து கேட்பவர்
வசூலித்து வருகிறார்.

இந்த இரண்டு பேரையும் எப்படியு
ஏமாற்றி, பணம் இல்லாமலே கையெ
வாங்கிவிடுவது என்று புறப்பட்டார்கள் இ
எத்தர்கள். இருவரும் சென்னை மாகாண
தாம். காந்தியாரை ஏமாற்ற எண்ணினான்
மருந்துக் கடை ஆசாமி. பெர்னட்ஷாவைத்
கடிக்கப் புறப்பட்டான் ஒரு மாணவன்.

"பாபுஜீ, என்னிடம் ஒரு நாட்டு மருந்
கிறது. உங்களுக்கு வேண்டுமா? உட
மிகவும் நல்லது. உங்கள் சமுகத்தைப் பா
கொண்டு அனுப்புகிறேன்" என்று காந்திய
ஒரு கடிதம் எழுதினான் "மருந்துக்
ஆசாமி.' எனக்கு இந்த மருந்துகளை
தேவை இல்லை. நான் இயற்கை வைத்தி
நம்பிக்கையுள்ளவன் என்று பதில் எழுதி
யெழுத்தும் போட்டு அனுப்பிவிட்டார் காந்
"பார்த்தீர்களா பாபுஜீ! நான் உங்களை ஏ
விட்டேன்! நான் உங்களுக்கு உண்மையி
மருந்து அனுப்பப்போகிறேன் என்றல்ல
கள் எண்ணிக்கொண்டீர்கள்! அதுதான்
யாது. உங்கள் கையெழுத்தை இல

...ன் செய்த சூழ்ச்சி இது" என்று தன்
...லை விளக்கி அந்த ஆசாமி கடிதம் ஒன்று
...ன் காந்தியார்க்கு. "இப்படியெல்லாம்
...றவது ஒழுங்குமுறைக்கு ஏற்றதல்ல.
...என்னை ஏமாற்றி என் கையெழுத்தை
... வாங்கிக்கொண்டீர்களே தவிர உங்கள்
...ம் இதன்மூலம் கெட்டுவிட்டதை நீங்கள்
...க்கவில்லையே!" என்று பதில் எழுதினார்
...ார்—மறுபடியும் ஒரு கையெழுத்தோடு!
...தை எழுதினால் என்ன, மருந்துக்கடை
...ர் விரும்பியது இலவசமாக ஒரு கையெ
...—கிடைத்தது இரண்டு கையெழுத்து!

...த போலத்தான் ஷாவையும் ஏமாற்றி
...ழுத்தை வாங்கிவிடலாம் என்று எண்ணி
...சென்னை மாணவன்.

...ம் எழுதினான்.

...அன்புள்ள அறிஞர் ஷா அவர்களுக்கு,
...கள் எழுதிய "செயின்ட் ஜான்" என்
... நாடகத்தில் கதாநாயகன் அடையும்
...வு சரியில்லை என்பது என் கருத்து.
எந்தக் காரணத்தினால் நீங்கள் அப்படி எழுதினீர்கள்? பதில் எழுத வேண்டுகிறேன்."

பதில் வந்தது:

"தம்பீ, உன் கதையெல்லாம் ஷா விடம் பலிக்காது. உனக்கு உண்மையில் செயின்ட் ஜான் நாடகத்தில் ஐயம் எதுவும் இல்லை. இதெல்லாம பெர்னாட் ஷாவிடம் இலவசக் கையெழுத்து வாங்க நீ செய்யும் சூழ்ச்சி என்பது ஷாவுக்கு நன்றாகத் தெரியும். இவ்வளவு எளிதாக யாரும் பெர்னாட்ஷாவை ஏமாற்ற முடியாது"

டைப் அடித்த கடிதம்—ஷா கையெழுத்து கிடையாது அதில்!

கடிதத்தைப் படித்துவிட்டு எமகாதகப் பேர்வழியப்பா ஷா என்றான் மாணவன்! பாவம், அவன் எவ்வளவு ஆசையாக ஷாவின் கையெழுத்தை எதிர்பார்த்திருந்தானோ, அவனுடைய ஆசையில் ஒரு பிடி மண் போட்டுவிட்டார் ஷா!

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

...ாயிரம் எடுத்துக் காட்டுகள் தருவேன்.
...சின் வரலாற்றிலிருந்தே தருவேன்.
...தியார் கொல்லப்பட்டார். இதற்குக் கார
...ன்ன? மதவெறி. மதவெறி எங்கிருந்து
...து? பொருள் வெறியிலிருந்து வருகிறது.
...ள் வெறியை ஒழித்தல்வேண்டும் என்பதே
...வேலர் கொள்கை—தமிழ்நாட்டுக் கொள்
...தென்னாட்டுக் கொள்கை.

...க்கு மீண்டும் பிறப்புண்டேல் நான் ஆதித்
...ாகப் பிறக்க விழைகிறேன் என்று காந்தி
...ார் ஒருமுறை குறிப்பிட்டார். நான் அப்
... எழுதினேன். மோட்சம் வேண்டாம்.
... கொள்கை உடையவன் நான்—ஆகவே,
...ங்கள். தீண்டாதவனாய்ப் பிறவுங்கள்.
... வடநாட்டில் பிறவாதேயுங்கள். எங்க
...ய பொருனை—பொருனை என்றால் பலருக்
...ரியாது—தாமிரபரணி ஆற்றங்கரையில் பிற
..." என்று நான் எழுதி இருந்தேன்.

... கிழவன். வயதானவன். என் பேச்சை
...ிலே ஒழுங்குபடுத்திக்கொண்டு வந்தே
... இடையே ஒன்றை விட்டுவிட்டேன்.
... முழுவதும் சமதர்ம ஆட்சி வந்துவிட்டால்
...து தமிழ்நாடு—தென்னாடு என்ற கிளர்ச்
...டம் ஏது என்று சிலர் கேட்கின்றனர்.
...ளுக்கு, மார்க்ஸ், நேஷனலிடி என்பது
...ன்ன எழுதி உள்ளார் என்பதைப் படியுங்
கள் என்று கூற விழைகிறேன். அதை ஆராய்ந்து பார்த்தால் சோஷலிசம் வந்த பின்னரும் நேஷனலிடி (இனம்) உண்டு என்பது தெரியும்.

இனியும் நீண்ட நேரம் பேச விழைகிறேனில்லை. சிங்காரவேலர் கொள்கையே நம கொள்கை—தென்னாட்டுக் கொள்கை—சமதர்மக் கொள்கை; அவருடைய கொள்கையை வளர்க்க நம்மால்தான்—தென்னாட்டவரால்தான் முடியும் என்று சொல்லி, அறிஞர் — கலைஞர் — சிங்காரவேலர் படத்தை நான் திறந்து வைக்கிறேன்."

திராவிடர் இயக்கப் போர் முரசு!

புரட்சிக் கருத்துகளின் ஒளி விளக்கு!

நியூ ஜஸ்டிஸ்

[ஆங்கில வாரத் தாள்]

திராவிட சமுதாய எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் ஒற்றுமைக்கும் ஓயாதுழைப்பதே நியூ ஜஸ்டிஸின் இலட்சியம்.

தனிப் படி	ஆண்டுத் தொகை	அரை ஆண்டு
அணா 2	ரூ. 6-0-0	ரூ. 3-0-0

"நியூ ஜஸ்டிஸ்" நிலையம்

7, நமசிவாய முதலி தெரு,
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை - 21.

தென்னாட்டு வளர்ச்சிக்கு உதவாது வடநா

சான்று வேறு வேண்டுமோ? என் வாழ்வே போதுமே!

பிரிவோம்! பிரிவோம்! தனிநாடு அமைப்போம்!

விஞ்ஞானி நாயுடுவின் விளக்கவுரை

அகில தமிழர் மாநாட்டில், அறிவியல் அறிஞர் ஜி. டி. நாயுடு, ஆற்றிய விரிவுரையின் ஒரு பகுதி

தென் இந்தியாவுக்கு தனிமத்திய சர்க்கார் ஏன் வேண்டும் என்பதை எடுத்துக் கூறி விளங்க வைக்க வேண்டும் என்பதற்காகவே இங்கு வந்தேன். நான் என்னுடைய சொந்த முயற்சியினாலும், பிற பொது வேலைகளினாலும் அடைந்த அநுபவங்களை தனித் தனியாக எடுத்துக் கூற இயலவில்லை. ஆகையால் எல்லாவற்றையும் ஒன்றாகவே இங்குக் கூறுகிறேன்.

வட இந்தியர்கள் மீது எனக்கு எவ்வித க்ஷாத்திரமும் கிடையாது. வட இந்திய அகதிகள் முச்சூடும் அல்லது வட இந்திய மக்கள் அத்தனை பேருமே இங்கு குடியேறி, நிலையாக வாழ்ந்து, இங்குள்ள தென் இந்தியர்களோடு தென் இந்தியர்களாய் அதாவது திராவிடர்களோடு திராவிடர்களாய் வாழ்வதானால் நான் பொருட்படுத்த மாட்டேன். பஞ்சாப் அகதிகள் இங்கு வந்து குடித்தனம் நடத்துவார்களானால் அதை ஒரு பேறு என்றே கருதுவேன். அவர்கள் நங்களுடைய வேலையைச் செய்வதில் நிரம்ப நல்லவர்கள்; அவர்களிடமிருந்து நம்முடைய மக்கள் பல பாடங்களைக் கற்றுக் கொள்ளவும் கூடும். பாகிஸ்தான் ஏற்படவில்லையானால் நாம் தங்கத்தைக் கொடுத்தாலும் கூட அவர்களை இங்கே கொண்டு வர முடியாது.

ஏற்கனவே சில வட இந்தியர்கள் குடியும் குடித்தனமுமாகத் தென்னிந்தியாவில் இருந்துவருகிறார்கள். இங்கே தான் அவர்களது எல்லாத் தொழில்களையும் நடத்தி வருகிறார்கள்; சென்னையிலும் மற்ற ஊர்களிலும் நடத்தி வரும் தொழில்கள்மீதும் நில்புலன்கள் மீதும், அவர்களது செல்வங்களைப் போட்டுவைத்திருக்கின்றார்கள். அவர்களும் தென்இந்தியர்களைப் போல அதாவது திராவிடர்களைப் போல இங்கேயே நிரந்தரமாய் நிலைத்து வாழ்வார்களானால், அவர்கள் மீது க்ஷாத்திரமோ, துவேஷமோ, கெட்ட எண்ணமோ எவருக்கும் ஏற்படமாட்டாது.

ஆனால் வட இந்தியரின் செயலைப் பொறுத்து முக்கியமான ஆட்சேபணை என்னவென்றால், இந்த தென்னாட்டு மண்ணுக்குரிய மக்களுக்குமேலாகவும், அதிகப்படியாகவும், வட இந்திய சர்க்கார் மூலம் விசேஷ சலுகையும் சிறப்பும் பெற்று, தென் இந்தியாவின் சத்துக்கள் அத்தனையையும் வடிகட்டி எடுத்து வட இந்தியாவின் செழிப்பை வளர்ப்பதற்கு அனுப்புவதென்பது இருக்கிறதே, அதுதான் இங்குள்ளவர்கள் மனதை மாற்றுகிறது. தென் இந்திய செல்வத்தை வட இந்தியாவுக்குத் தட்டிக்கொண்டு போகும் வழக்கம் உடனே ஒட்ட நறுக்கப்பட்டாக வேண்டும். இது அமுலுக்கு வர வேண்டுமானால் ஒரே வழிதானுண்டு. அதாவது தென் இந்தியாவுக்கு என்று தனி சர்க்கார் ஏற்பட்டால்தான் அது முடியும். ஏனென்றால் இப்போதுள்ள மத்திய சர்க்கார், இன்றைய நிலையில் தென்னாட்டுக்கு நியாயம் வழங்க மாட்டார்கள்.

சென்னைக்கு மத்திய சர்க்கார் உதவி செய்ய விரும்பவில்லை அல்லது உதவி செய்ய முடியவில்லை என்பதை நிரூபிப்பதற்கு என்னால் அனேக எடுத்துக்காட்டுகள் தரமுடியும்.

நான் மூன்றாவது முறையாக ஐரோப்பாவில் சுற்றுப் பயணம் செய்து திரும்பிய பிற்பாடு இந்தியாவுக்கே புதிதான ரேடியோ பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலையைத் தொடங்கினேன். ஸ்பீகர் (speaker) வால்வு (valves) இவ்விரண்டைத் தவிர ரேடியோ பெட்டி பூராவும் ஒரேகட்டிடத்துக்குள் என்
னால் தயாரிக்கப்பட்டு வந்த
ரேடியோ பெட்டிகளின்
ரூ. 70 முதல் 120-க்கு மேல்
வில்லை. ஆனால் அவைகளு
ஸ்பீக்கர்களையும் வால்வு
வெளிநாட்டிலிருந்து தரு
வேண்டியதாயிருந்தது. அ
இறக்குமதி லைசென்ஸ் கோரி
சர்க்காரிடம் விண்ணப்
கொண்டேன். அந்த சர்க்
என்னுடைய வேண்டுகோ
தென் இந்தியர் வேண்டு
காதில் போட்டுக் கொள்ள
கோவையில் ஒரு எலக்ட்ரிக்
டார் தொழிற்சாலை தொடங்
குத் தேவையான செப்புக்
களுக்கும் இரும்புத் தகடுக
லைசென்ஸ் கேட்டு, வட இந்
துள்ள அதே மத்திய சர்க்
விண்ணப்பம் அனுப்பி
அதற்கும் அந்த வடக்கத்தி
திய சர்க்கார் அனுமதி தர

யுத்தம் முடிந்ததும், மோ
வண்டித் தொழிற்சாலை ஒ
தென்னாட்டில் தொடங்க எ
அதற்கு வேண்டிய மூலதன
கிட்டுக்கு அனுமதி கேட்டு
சர்க்காருக்கு விண்ணப்
கொண்டேன். சென்னையி
மாகாண சர்க்கார் சிபார்
துங்கூட வடக்கேயுள்ள
சர்க்காரால் என் விண்ண
லட்சியம் செய்யப்படவில்லை
இந்தியாவிலிருந்து சென்ற
கோரிக்கையை அலட்சிய
திய அதே மத்திய ச
எனக்குப் பிறகு விண்ணப்
கொண்ட வட இந்தியத்
முதலாளிகளுக்கு, இன்று
தொழிற்சாலைகள் தொடங்
காக வேண்டிய மூலதனப்
அனுமதியும் இன்னும் எல்லா
யங்களும் செய்து கொடுத்
ருர்கள். தென் இந்தியாவில்
வில் நான் தொடங்கிய ரே

(5-ம் பக்கம் பார்க்க)

Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoli
at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A.